DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.136/ 2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திரு. சிலுவை அந்தோணி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி ஆய்வாளர், தாளமுத்துநகர் காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

**(1,4 எதிரிகள் ஆஜர் 2,3 எதிரிகள் ஆஜரில்லை: 2,3 எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 26-02-2026.(நேரம்: 12.25PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது தாழமுத்துநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2. இதற்கு முன்பாக செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 20.08.2019 ஆம் தேதி 17.00 மணிக்கு முதல் நிலை காவலர் திரு.முத்துகனி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண் 105/19 சட்டபிரிவுகள் 2949b),323,506(2) இதச வாக பதிவு செய்த வழக்கை விசாரணைக்கு வேண்டி எனது வசம் ஒப்படைத்தார்.

3.வழக்கு கோப்பை எடுத்துக்கொண்டு நான் 20.08.2019 ஆம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பூமாதேவி, கலாசெல்வி ஆகியோர்கள் முன்னிலையில் டார்ச் லைட் மற்றும் தெரு விளக்கு

வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்து மேற்படி சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன். **அந்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு சாட்சிகள் பிரதாப், முருகன், பார்வதி, முத்துகருப்பன், முருகபெருமாள், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் திருமதி.முத்துகனி என்பவரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. சம்பவத்தை விசாரணை செய்ததன் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் மேற்படி எதிரிகளை கைது செய்ய சென்றபோது மேற்படி 1,2,3,4 எதிரிகள் தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிஆர்எம்பிஎண் 3872/2019 பிரகாரம் முன் ஜாமின் பெற்றதால் கைது செய்ய இயலவில்லை.

6. பின்பு இவ்வழக்கில் காயம்ப்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த TVMCH அரசு மருத்துவர் திருமதி கோகிலா லெட்சுமி என்பவரை விசாரித்து காய சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அரசு தரப்பில் காயசான்றிதழ் குவிமுச பிரிவு 294(3) ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பில் ஆட்சபேனை இல்லை என கூறியதன் **அடிப்படையில் இந்த நீதிமன்றத்தால் சிஆர்எம்பி எண் 856/2025 பிரகாரம் அனுமதி ஆனதன் பேரில் அந்த காயசான்றிதழ் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7.பின்பு இவ்வழக்கில் காயம்ப்பட்ட சாட்சிக்கு சிடி ஸ்கேன் எடுத்த TVMCH அரசு மருத்துவர் ரேடியாலாஜிஸ்ட் திருமதி இன்பெண்ட் புஷ்பா வேணிஷா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

8.இவ்வழக்கின் சட்டபிரிவான **294(b),323,506(2)** இதச விலிருந்து மருத்துவர் அளித்த சான்றிதழ் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டபிரிவு 294(b),323,506(ii) மற்றும் 325 இதச பிரிவாக சட்டபிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல்செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9.இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து 16.09.2019 ஆம் ேததி 1,2,3,4 எ திரிகள் மீது 294(b),323,506(ii) மற்றும் 325 இதச பிரிவாக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 02.47PM)**

1.இந்த வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 19.08.2019 தேதியன்று புகார்மனுதாரர் நேரடியாக வந்து காவல் நிலையத்தில் புகார்மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2.ஊரில் கோயில் கொடை திருவிழா நடைபெற்றால் அதற்கு காவல் நிலையத்தில் இருந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றால் சரிதான்.

3.இந்த வழக்கில் அந்த 19.08.2019 தேதியில் என் விசாரணையின்படி கோவில் கொடை விழா நடைபெற்றது என்றால் வழக்கு ஆவணங்கள்ப்படி துலங்கவில்லை.

4.இந்த வழக்கில் புகார்தாரரையும், அவருடைய நெருங்கிய உறவினரான முத்துகருப்பன், முருகபெருமாள், முருகன், பார்வதி ஆகியோர்களை தவிர வேறு நபர்கள் யாரையும் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணைசெய்யப்படிவில்லை என்றால் சரிதான்.

5.காயம்ப்பட்ட நபர்களிடமிருந்து ரத்தம்ப்பட்ட துணிகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் கம்பு, கல் ஆகியவை வழக்கு சொத்துபொருளாக கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

7. சம்பவம் நடைபெற்ற இடம் ஆள்கள் அதிக நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான்.

8.காய சான்றிதழை நான் காலதாமதமாக மருத்துவரிடமிருந்து பெற்றேன் என்றால் 1 மாதம் ஆனது.

9.என்ன காரணத்தின் அடிப்படையில் மருத்துவரிடமிருந்து காய சான்றிதல் பெற்றேன் என்ற விவரத்தை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

10.எக்ஸ்ரே மருத்துவர் மற்றும் ஸ்கேன் மருத்துவரை தனிதனியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரித்துள்ளேன்.

11.ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ரிப்போர்ட் ஆகிய மருத்துவ ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்,

12. பார்வைமகஜரில் சம்பவம் நடந்ததற்கான தடயமோ , பொருள்களோ காணப்படவில்லை என்றால் சரிதான்.

13.இந்த வழக்கி்ன் அச்சிட்ட முதல் தகவல் அறிக்கையின் 14 வது காலத்தில் புகார்தாரரின் கையொப்பமோ, கைரேகையோ பெறப்படவில்லை என்றால் புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது கைரேகை பெறவேண்டிய அவசியம் இல்லை. புகார்தாரர் கைரேகை வைக்கும் அளவிற்கு சரியான உடல்நிலையில் இல்லை.

14.இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையிலும், குற்றப்பத்திரிக்கையிலும் 4 நபர்கள் மீது தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. நான் மருத்துவரை விசாரிக்கும்போது கிளாக்குளம் திருவிழாவில் வைத்து இனம் தெரிந்த 5 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளதாக மருத்துவர் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

16.இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

17.சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஒருதலை பட்சமாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

18. வீட்டிலிருந்த எதிரியை அழைத்து சென்று கைது செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

19. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றும் நான் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.